**கொழும்பு கல்லைக்கழகத்துடன் இணைந்த உயிர் இரசாயனவியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

உயிர் இரசாயனவியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2003 இன் 01 ஆம் இலக்க உயிர் இரசாயனவியல், மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவக விதப்புரையின் 17 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தின் 107(5) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 பெப்ரவரி மாதத்தின் போது நிறுவனத்தில் இருந்து விலக்கப்பட்டிருந்த சாரதியிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 212,497 ஆன இடர் கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அந்த சாரதி ஒரு மாத காலத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறையின் அடிப்படையில் 2023 பெப்ரவரி மாதத்தின் போது வெளிநாடு சென்றிருந்தார். அவர் அங்கிருந்து கேட்டு விலகும் கடிதம் அனுப்பியிருந்ததுடன் அவரின் வெளிநாட்டு விடுமுறை | விரைவாக அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | யில் இருக்கும் போது மீண்டும் சேவைக்கு வருகை தராமை தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதற்கு நிருவாக சபை தீர்மானிகத்திருந்தது. அதனால் அதன் இறுதித் தீர்மானம் கிடைத்தவுடன் இடர் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 மார்ச் 16 ஆம் திகதிய இலக்கம் 04/2016 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 4.2 ஆம் பிரிவு | நிறுவனத்தால் பேணிச் செல்லப்படுகின்ற இளமானி/முதுமானி பட்டப் படிப்பிற்காக (MPhil/PHD) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. | பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவால் பாடநெறிக்காக முறையான அங்கீகா ரத்தைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்று ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பட்டப்பின் பாடநெறிகளுக்காக மேவுகை அங்கீகாரம் (Blanket approval) பெற்றுக் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய இலக்கம் 03/2022 என்ற தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 03(viii) ஆம் பிரிவு | நிறுவகத்தால் ஊழியர் நலன்புரி திட்டமொன்றாக அமுல்படுத்தப்பட்ட சுகாதார காப்புறுதி திட்டத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படாமல் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 128,840 மற்றும் | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைகழகங்கள் சட்டத்தின் பிரிவு இலக்கம் 8(d) இன் பிரகாரம் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு ஊழியர் பங்களிப்புடன் நலன்புரி திட்டமொன்றை அமுல்படுத்தி அதன் வரப்பிரசாதங்கள் | பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | 127,922 உழைக்கப்பட்ட நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. | ஊழியர்களுக்கு வழங்கும் இயலுமை காணப்படுகின்றது. அவ்வாறே ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 718 இன் மூலம் ஆணைக்குழுவின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு சுகாதார காப்புறுதி திட்டமொன்றை ஸ்தாபிப்பதற்கும், 718.1 (b) பிரிவின் மூலம் அவ்வாறு ஸ்தாபிக்கப்படுகின்ற காப்புறுதித் திட்டத்தில் தவணையாக 50 சதவீதம் ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கும் மிகுதி 50 சதவீதம் உரிய நிறுவனத்திலிருந்து உழைக்கப்பட்ட நிதியத்திலிருந்து செலவிடு வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

நிதி விளைவுகள் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,541,553 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 12,080,867 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 21,622,420 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 மனித வள மகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியின் பிரகாரம் தற்காலிகமாக ஆய்வு உதவியாளர் (ஒப்பந்த அடிப்படையில்) 02 பதவிகள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் போது அந்த பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் 04 மிகை | கல்விசார் பிரிவுகளில் காணப்படுகின்ற கல்விசார் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் இயலளவின் அடிப்படையில் உழைக்கப்பட்ட வருமானத்தில் கொடுப்பனவு செய்யும் நடவடிக்கைகளுக்காக | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியாது. |

| | |
|---|---|
| உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 3,628,644 உழைக்கப்பட்ட நிதியத்திலிருந்து மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட தற்காலிக ஆய்வு உதவி பதவிகளில் 02 (ஒப்பந்த அடிப்படையில்) மேலதிகமாக கையளித்தல் அடிப்படையில் தற்காலிக ஆய்வு உதவியாளர்கள் அல்லது விஞ்ஞான ரீதியான உதவியாளர்கள் (Scientific Assistant – on assignment basis) – 04 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். |